செ.வெ.எண்: 75/ மார்ச் /2020 நாள்: 24.03.2020

**திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இன்று மாலை 6 மணி முதல் வருகின்ற 31.03.2020 வரை 144 தடை உத்தரவு நடைமுறைப்படுத்தப்பட உள்ளது – மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் அறிவிப்பு.**

**அத்தியாவசியப் பொருட்களான காய்கறிகள், பால், உணவுப் பொருட்கள், மளிகைப் பொருட்கள், இறைச்சி, மீன் கடைகள் போன்றவற்றிற்கு தடை ஏதும் இல்லை.**

**திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள காந்தி காய்கறி மார்க்கெட் வழக்கம் போல் இயங்குவதற்கு தடை ஏதும் இல்லை.**

---------

திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகக் கூட்டரங்கில் இன்று (24.03.2020) நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் இன்று மாலை 6 மணி முதல் வருகின்ற 31.03.2020 வரை 144 தடை உத்தரவு நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. ஐந்து நபர்களுக்கு மேல் ஒன்றுகூடக் கூடவோ, வாகனங்களில் செல்லவோ கூடாது என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

144 தடை உத்தரவு குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் கொரோனா வைரஸ் நோய் தாக்கம் தொடர்பாக மார்ச் 1ம் தேதி முதல் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மாவட்ட நிர்வாகம் மற்றும் சுகாதாரத்துறை மூலம் எடுக்கப்பட்டு வருகிறது. இதனையொட்டி இன்று மாலை 6 மணி முதல் 31.03.2020வரை 144 தடை உத்தரவு அமுல்படுத்தப்பட உள்ளது. வெளிநாடுகளில் இருந்து திருச்சிராப்பள்ளிக்கு வருகை தந்த 483 நபர்கள் தனிமைப்படுத்தப்பட்டு, பின்னர் வீட்டில் தனிமையில் இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டு வீட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். மேற்கண்ட 483 நபர்களின் குடியிருப்பில் வெளியில் வரக்கூடாது என்று வீட்டு கதவில் அறிவிப்பு ஒட்டப்பட்டுள்ளது. மேலும் வீட்டில் உள்ளவர்களும் வெளியில் செல்லக்கூடாது என்றும், மற்ற நபர்களுடன் எவ்வித தொடர்பும் வைத்துக் கொள்ளக் கூடாது எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவர்களில் யாருக்கேனும் சளி, இருமல், காய்ச்சல் இருந்தால் உடனடியாக அரசு மருத்துவமனைக்கு வரவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. தனிமைப்படுத்தப்பட்டுள்ள வீடுகளுக்கு ஊர்காவல் படையினர் காவலர்கள் நியமிக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். இதுவரை 7 நபர்கள் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வருகிறார்கள். இதில், ஆண்கள் 5 நபர்களும், பெண்கள் 2 நபர்களும் அடங்குவர். இதுவரை 24 நபர்களுக்கு பரிசோதனை அனுப்பப்பட்டதில் 18 நபர்களுக்கு நோய் தாக்கம் இல்லை என சான்றிதழ் வரப்பெற்றுள்ளது.

6 நபர்கள் பரிசோதனை சான்றிதழுக்காக நிலுவையில் உள்ளனர். அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் 75 படுக்கை வசதிகள் தயார் நிலையில் உள்ளது. ஸ்ரீரங்கம், மணப்பாறை அரசு மருத்துவமனையில் தலா 30 படுக்கை வசதிகளும், இனாம்குளத்தூர், குழுமணி, நவல்பட்டு ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் கூடுதல் வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனைத்து குடும்ப அரிசி அட்டைதாரர்களுக்கும் ரூ.1,000ம் வழங்கப்படும் என்று அறிவித்துள்ளார்கள். இந்த ரொக்கப்பணம் அந்தந்த நியாய விலைக்கடைகள் மூலமாக வழங்கப்பட உள்ளது. இதுகுறித்து அரசாணை விரைவில் வெளியிடப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

அத்தியாவசிய தேவைகளான காய்கறிகள், பால், மளிகை, இறைச்சி, மீன் கடைகள், உணவு விடுதிகளுக்கு தடை ஏதும் இல்லை, வழக்கம் போல் செயல்படும். உணவுப் பொருட்கள், மருந்துப் பொருட்கள் கொண்டு செல்வதற்கு எவ்வித தடையும் இல்லை. வியாபாரிகள் மற்றும் விவசாயிகள் காந்தி மார்க்கெட்டில் காய்கறிகளைக் கொண்டு வந்து விற்பனை செய்வதற்கு தடை ஏதும் இல்லை. அத்தியாவசிய மற்றும் அவசர பணிகள் தவிர மற்ற பொது போக்குவரத்து, தனியார் போக்குவரத்து, மகிழுந்துகள், ஆட்டோ, டாக்சி போன்றவை இயங்காது. சென்னையிலிருந்து திருச்சி வந்த பயணிகளுக்காக இன்று காலை 198 சிறப்புப் பேருந்துகள் இயக்கப்பட்டு மக்கள் கூட்டம் குறைக்கப்பட்டது. மேலும், இன்று மாலை 150 பேருந்துகள் இயக்குவதற்கு தயார் நிலையில் உள்ளது. சாலைகளில் காய்கறி, உணவு வகைகள், பால், கால்நடை தீவனமான தவுடு, புன்னாக்கு, பருத்தி போன்ற பொருட்களை எடுத்துச் செல்லவும், எடுத்துச் செல்லும் வாகனங்களுக்கும் (Goods Vehicles) தடை ஏதும் இல்லை.

யாருக்காவது கொரோனா வைரஸ் நோய் பாதிப்போ மற்றும் வெளிநாடுகளில் இருந்து வந்திருப்பதோ தெரியவந்தால் 1077 என்ற எண்ணிற்கு தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்கலாம். வெளிநாடுகளில் இருந்து வந்துள்ள நபர்கள் சுயமாகவே தங்களை தனிமைப்படுத்திக் கொண்டு நோய் அறிகுறி வருகிறதா என கண்காணித்து அரசு மருத்துவமனைகள் மூலம் மருத்துவ பரிசோதனை எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும், அதற்கு குடும்ப உறுப்பினர்கள் நோய் தொற்று ஏற்படாத வண்ணம் செயல்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இதுபோன்ற நடவடிக்கை இந்த கடுமையான தொற்றுநோய் மற்ற குடும்ப உறுப்பினர்களுக்கும், மற்றவர்களுக்கும் பரவாமல் தடுக்க பேருதவியாக இருக்கும் என்பதை நாம் அனைவரும் உணர வேண்டும்.

வெளிநாடு சென்று திரும்பிய நபர்களுடன் நேரடி தொடர்பு இல்லை என்றாலும் இந்நோய் தொற்றின் கடுமையை உணர்ந்து நோய் தொற்று ஏற்பட்டிருக்க வாய்ப்பு உள்ளதை கருத்தில் கொண்டு இந்த

நோய்க்கான அறிகுறி உள்ளவர்கள் உடனடியாக அரசு மருத்துவமனையில் மருத்துவ பரிசோதனை செய்து கொள்ளவும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

மாவட்டத்தில் 15 தினங்களுக்குள் பிரசவம் நிகழும் நிலையில் 1482 கர்ப்பிணிப் பெண்கள் கண்டறியப்பட்டுள்ளனர். இவர்களுக்கு மருத்துவ உதவி தேவைப்படின் 108 ஆம்புலன்ஸ் மூலமாக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வதற்கு சுகாதாரத் துறையினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் நோய் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்கு மாவட்ட நிர்வாகத்தின் மூலம் எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு பொது மக்கள் முழு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கேட்டுக்கொண்டார்கள்.

வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
திருச்சிராப்பள்ளி.